பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 12 திங்கட்கிழமை (25-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 120

# கிழக்கில் தொடர்ந்து பல தாக்குதல்கள்!

## சனி பிற்பகலுக்குப் பின்

சாவகச்சேரி, மார்ச் 25

வந்தாறு மூலையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஒரு பிளட்டூனையே கூண்டோடு அழித்த தாக்குதலை அடுத்து கிழக்கில் பல தாக்குதல்களை தொடர்ந்து மேற்கொண்டு அங்கு ஸ்ரீலங்கா படையினர் மீதான தமது பிடியை விடுதலைப் புலிகள் இறுக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

நேற்றுக் காலை 2 மணியளவில் ஏறாவூர் பொலீஸ் நிலையம் புலிகளால் தாக்கப்பட்டது: அப்பகுதியில் கடும் சமர் இடம்பெற்றதாகவும், பொலீஸாருக்கு சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கல்முனை நகரில் ரோந்து சென்ற பொலீஸ் அணி ஒன்றின் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதல்களினால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

இதேசமயம் — மட்டக்களப்பு சின்னவத்தை பொலீஸ் நிலையத்தில் இருந்து மாவடி காவல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இறந்தோர் எண்ணிக்கை 41 ஆக உயர்வு

கொழும்பு, மார்ச் 25

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் நேற்று முன்தினம் நடந்த தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 41 ஆக அதிகரித்தது.

மேற்கண்டவாறு தெரிவித்த பாதுகாப்பு படையினர் இத்தாக்குதலில் காயமடைந்த படையினரை மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துசெல்ல ஹெலிக்கொப்டர் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

# சாள்ஸ் அன்ரனி படையைச் சேர்ந்த 500 புலிகள் மட்டக்களப்பில்

கொழும்பு, மார்ச் 25

மட்டக்களப்புப் பகுதிகளில் தாக்குதல்களை மேற்கொள்ள, விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த தற்கொலை போராளிகள், குண்டுகளை வெடிக்க வைக்கும் வல்லுனர்கள் மற்றும் சாள்ஸ் அன்ரனி படையணியைச் சேர்ந்த 500 போராளிகள் ஆகியோர் வடபகுதியிலிருந்து மட்டக்களப்பு வந்துள்ளனர் என மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ''லங்கா தீப'' சிங்கள நாளிதழ் தெரிவிக்கிறது.

மட்டக்களப்புப் பகுதியில் பாரிய தாக்குதலை மேற்கொள்ள புலிகள் வந்துள்ளனர் எனக் கிடைத்த தகவலை அடுத்து மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள பொலீஸ் நிலையங்கள் மற்றும் இராணுவ முகாம்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(இ-10)

# நவீனகப்பல்கள் அரசிடம் இருந்தாலும் கடலில் ஆதிக்கம் செலுத்த முடியாது

## கொழும்புப் பத்திரிகை கூறுகிறது

சாவகச்சேரி, மார்ச் 25

என்னதான் நவீன ரக ரோந்துப் படகுகள் கடற்படையினரிடம் இருந்தாலும் இலங்கையின் கடற்பரப்பு கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டில் இல்லை.

விடுதலைப் புலிகளின் பிரதான தளமாகக் கருதப்பட்ட யாழ்ப்பாணத்தில் படையினர் கொடி நாட்டிய போதும் புலிகளின் கொடி வடக்கில் பறந்து கொண்டுதான் இருக்கிறது.

கொழும்புப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை - நாற்புறமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவு என்பது முன்னர் அழகுக்குரிய விடயமாக இருந்தது.

இப்போது அதுவே ஆபத்துக்குரிய இடமாகிவிட்டது.

தரைப் பாதைகளில் என்றால் தடை அரண்களைப் போட்டு வாகனங்களை நிறுத்தி சோதனையிடலாம்.

கடல் பாதையில் எவ்வளவு விழிப்பாக இருக்க நினைத்தாலும் ஏதாவது ஒரு வழியாக அதிவேக விசைப்படகு சீறிக்கொண்டு பறந்துவிடும்.

பரந்த கடற்பரப்பில் கண்காணிப்பு என்பது இலகுவான காரியம் அல்ல. ஆழக் கடல் இப்போது யுத்த கோலம் பூண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

# கிழக்கைப் புலிகள் தாக்கினாலும் வடக்கில் தாக்குதல் ஏற்பாடுகள் திட்டமிட்டபடி நடந்து வருகின்றன

கொழும்பு, மார்ச் 25

வடக்கில் மீண்டும் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காக கிழக்கில் இருந்து சில படைப்பிரிவுகள் அண்மையில் வடக்கிற்கு நகர்த்தப்பட்டன. இப்படிப் படைகளை நகர்த்தும் போது அப்பகுதியில் தாக்குதல்களை நடத்துவது விடுதலைப் புலிகளுக்கு வழக்கமாகிவிட்டது. எனினும் வடக்கில் தாக்குதலுக்கான ஏற்பாடுகள் திட்டமிட்டபடி நடந்து வருகின்றன.

பிரதி பாதுகாப்பு அமைச்சர்

## அனுருத்த கூறுகின்றார்

ஜெனரல் அனுருத்த ரத்வத்த ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறினார்.

விடுதலைப் புலிகளை அடியோடு ஒழிப்பதன் மூலமே பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளை ஒழிக்கும் வரை சிறுசிறு சண்டைகள் தவிர்க்க முடியாதவை.

தமிழ் புத்தாண்டுக்கு முன்பாக விடுதலைப் புலிகள் பூண்டோடு அழிக்கப்படுவர் என்றும் அவர் சொன்னார்.

## வந்தாறுமூலைப் பகுதியில் படையினர் பெரும் தேடுதல்

கொழும்பு, மார்ச் 25

வந்தாறுமூலையில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற தாக்குதலையடுத்து படையினர் பாரிய தேடுதலை நேற்று மேற்கொண்டனர்.

மட்டக்களப்பில் ரோந்தில் ஈடுபட்ட முழு படை அணியையும் விடுதலைப் புலிகள் அழித்துவிட்டதாக கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர். 40 படையினர் கொல்லப்பட்டதாக அரசாங்கமும் நேற்று ஒப்புக்கொண்டது.

இவ்வாண்டில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஆகப் பெரிய தாக்குதல் இது என்றும் —

கூடுதல் படை அப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் விடுதலைப் புலிகளின் நிலைகளைத் தாக்க இரு ஹெலிகளும் அனுப்பப்படுவதாகவும் — கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

(இ-3)

## 3 போராளிகள் வீரச்சாவு

சாவகச்சேரி, மார்ச் 25

மட்டக்களப்பு வந்தாறுமூலைப்பகுதியில் 40 படையினர் கொல்லப்பட்ட சம்பவத்தில் விடுதலைப்புலிப் போராளிகள் மூவர் வீரமரணமடைந்தனர்.

மேஜர் றதன், லெப்டினன்ட் இலக்கியன், 2 ஆம் லெப்டினன்ட் முரளி ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தனர்.

(இ-3-7)

## வந்தாறுமூலையில் கைப்பற்றிய ஆயுதங்கள்

சாவகச்சேரி, மார்ச் 25

மட்டக்களப்பு, வந்தாறுமூலையில், விடுதலைப் புலிகளின் 10 நிமிட நேர அதிரடித் தாக்குதலில் 40 படையினர் கொல்லப்பட்ட சம்பவத்தில், விடுதலைப் புலிகள் பல ஆயுத தளபாடங்களையும் கைப்பற்றினர்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி கிண்ணியடி இராணுவ முகாம் மீதான தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிய 5 போராளிகளின் 31 ஆம் நாள் நினைவாக 100க்கு மேற்பட்ட படையினர் மீது நடத்தப்பட்ட இந்த பாரிய அதிரடித் தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மின்மாற்றி தகர்ப்பால் 9 கோடி நஷ்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை தகர்க்கப்பட்ட மின்மாற்றிகளால் 9 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மின்சாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தின் பின் கடந்த வெள்ளி வரை 56 மின்மாற்றிகள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளன.

(இ-3)

## பாரதீய ஜனதா தனித்துப் போட்டி

பாரதிய ஜனதாக் கட்சி தேசிய அளவில் எந்த ஓர் கட்சியுடனும் தேர்தல் கூட்டு வைத்துக் கொள்ளாது என்று அக்கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி நேற்று அறிவித்தார்.

எனினும் மாநிலங்கள் மட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கூட்டு ஏற்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாகவும் —

மகாராஷ்ரா, பீகார், ஹரியானா ஆகிய மாநிலங்களில் தேர்தல் கூட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(இ-ரி)

## எந்தநேரமும் வடக்கில் தாக்குதல் ஆரம்பமாகலாம்

### அரச சார்பு பத்திரிகை தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

வடக்கில் மற்றொரு பெரிய இராணுவ நடவடிக்கை ஒன்று எந்த நேரத்திலும் ஆரம்பிக்கப்படலாம்.

இவ்வாறு அரச சார்பு பத்திரிகையான 'சண்டே ஒப்சேவர்' தெரிவித்துள்ளது.

அதே சமயம் வடமராட்சியில் அல்லது தென்மராட்சியில் இன்னொரு தாக்குதலுக்கு படையினர் தயாராவதாக பி.பி.ஸி. சிங்களச் சேவைக்கு சண்டே ரைம்ஸ் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

''வடக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசசங்கம் முழு அளவில் யுத்தத்தில் இறங்கப்போகிறது. இதற்கான ஆயத்தங்கள் துரித கதியில் செய்யப்பட்டு வருகின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 24 மணி நேரத்தில் 200 தமிழர்கள் கைது

கொழும்பு, மார்ச் 25

கொழும்பில் இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டுள்ள பாரிய தேடுதல் நடவடிக்கையில் கடந்த 24 மணி நேரத்தில் 200 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு நகரில் 100 கிலோ வெடிமருந்து மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலையடுத்தே இந்த பாரிய தேடுதல் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நன்கு பயிற்சி பெற்ற நாய்களும் இத்தேடுதலுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

கைது செய்யப்பட்டவர்களில் ஐந்து தற்கொலைப் படையினரும், பல வெடிகுண்டு நிபுணர்களும் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## புத்தாண்டை முன்னிட்டு படையினர்உஷார்

கொழும்பு, மார்ச் 25

கொழும்பில் புத்தாண்டுக் காலத்தில் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்பதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தார்.

புத்தாண்டு வரை பொலிஸாரின் சகல லீவுகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பொலிஸாரும், படையினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

(இ-8)

## ஊர்காவல் படையினர் வேலை நிறுத்தம்

வவுனியா, மார்ச் 25

வவுனியாவிலுள்ள மஹா மயிலங்குளம் பகுதியில் 47 ஊர்காவல் படையினர் கடந்த 21 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தங்களது பங்கர்களை பொலிஸார் சோதனையிடுவதை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே அவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

ஊர்காவல் படையினரின் வேலை நிறுத்தம் காரணமாக மயிலங்குளத்தினதும் அதனை அண்டிய கிராமங்களினதும் பாதுகாப்புக்கு வேறு பகுதிகளில் இருந்து ஊர்காவல் படையினரை பொலிஸார் அழைத்துள்ளனர் என ''திவயின'' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

(இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சிங்கர், ஊஷா தையல் இயந்திரங்களும் அதன் உதிரிப் பாகங்களும் விற்பனை செய்யப்படும். தையல் இயந்திரங்கள் நல்ல முறையில் திருத்தியும் கொடுக்கப்படும். தொடர்பு: ஊஷா, ஏக விநியோகஸ்தர், பஸ் நிலையம் அருகில், பருத்தித்துறை. (40372)

அல்விரியா இன நல்ல நிலையில் உள்ள 7½ முழக் கட்டு மரம் விற்பனைக்குண்டு. விலை 42,000/- ரூபா. தொடர்பு: மு. முத்துவேலு, மாமுனை, செம்பியன்பற்று. [41213]

## தேவை

நல்ல நிலையிலுள்ள சிங்கர் ஊஷா தையல் இயந்திரங்கள் நியாயமான விலைக்கு கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: ஊஷா ஏக விநியோகஸ்தர், பஸ் நிலையம் அருகில், பருத்தித்துறை. (40371)

## COMPUTER CLASS

பிரத்தியேக கணணி வகுப்புக்கள்: (Basic, Pascal, dBase III+, Lotus 123, C++) தென்மராட்சி மாணவர்களின் வசதி கருதி விசேட வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. தொடர்பு: K. Vignesh, Talent Institute, கோவில் சந்தை, கரவெட்டி. (40376)

## வாடகைக்கு

பொருள்கள் வாடகைக்கு கொடுக்குமிடம். சில்வர் பீங்கான், ரம்லர், தண்ணீர் ரம்லர், சில்வர்றே, கறிவாளிகள், செம்புகள், பிளாஸ்ரிக் பாய்கள், பந்திப்பாய், குத்து விளக்கு, சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், ஐஸ்கிறீம் கப்ஸ். வெள்ளை மாளிகை பெரிய அரசடி, சங்கத்தானை. (41051)

## 96/97 எண்சோதிடம்

சண் மாஸ்ரரின் கணிப்பில் எண்சோதிடப் பலாபலன்கள் நூல் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். யாழ். ஆனந்த்ஸ், கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. [41089]

## RADIO & ELECTRONICS

மேற்படி பயிற்சி நெறி செயல்முறை விளக்கங்களுடன் (றேடியோ, ரீ. வி., வீடியோ டெக் உட்பட) 28-3-96 காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது. விவரங்களுக்கு: N. சற்குணராசா (ஆசிரியர் North Ceylon Tech -enical Institute), மொடேர்ன் ரியூட்டரி, தம்பசிட்டி வீதி, 1ஆம் கட்டையடி, பருத்தித்துறை (றஞ்சன் பூங்காவிற்கு அருகில்). (40369)

## தவறிவிட்டது

செல்வி கமலா வினாசித்தம்பி என்பவருடைய பேர்ஸ் ஒன்று, அடையாள அட்டைகள், பாங் புத்தகம் என்பவற்றுடன் மீசாலைச் சந்திக்கும் – சாவகச்சேரி சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சாவகச்சேரி சந்தியிலுள்ள ''பூம் பொய்கை'' இல் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். (40379)

## புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான வெற்றிக்கனி தொகுப்பு (இதழ் 1 — இதழ் 6), இதழ் 7 — இதழ்8 விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 8, நவீன சந்தை மேல்மாடி (உட்புறம்), சாவகச்சேரி. (41088)

## பொருளியல்

**A/L**
**96-96 மீட்டல்**
**97**

ஆசிரியர்:-
திரு. R. இராஜேஸ்வரன்

ஆரம்பம்:-
**03-04-96**
புதன் பிற்பகல் 4 மணி

இடம்: கச்சாய் வீதி,
கொடிகாமம். (41209)

---

தென்மராட்சி
இளைப்பாற்று வேதனம் பெறுவோர்

## நலன்புரிச் சங்கம்

## ஆண்டுப் பொதுக் கூட்டம் - 1996

காலம்: 27-03-1996 பி. ப. 3-00 மணி (புதன்கிழமை)
இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி

அங்கத்தவர்கள் தயவு செய்து சமுகம் தரவும்.

அ. ஆறுமுகம் ஜே.பி
தலைவர்.

ச. ச. சற்குணசிங்கம்
கௌரவ செயலாளர். (41079)

---

# அந்தியேட்டி அழைப்பு

## அமரர் நாகலிங்கம் செல்வரத்தினம்

ஏழாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் செல்வரத்தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 26-03-96 (செவ்வாய்) குருபவனத்தில் நடைபெற உள்ளது. அன்று நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தற்போது இடம் பெயர்ந்து இருப்பவர்களின் முகவரிகள் தெரியாதபடியால் தனிப்பட்ட அழைப்பிதழ் கிடைக்காதவர்களும் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்

குருபவனம் (ஆஸ்பத்திரி அருகில்),
கண்டி வீதி,
சாவகச்சேரி. (41211)

---

பண்டத்தரிப்பு பரிஷ்
ப. நோ. கூ. சங்கம் (மட்டுப்படுத்தப்பட்டது)
சங்கப் பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கு,

## 15ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் 21-4-1996

மேற்படி சங்கத்தின் 15ஆவது வருடாந்தப் பொதுகூட்டம் 1996 - 04 - 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு சங்கத் தலைவர் திரு. ச. செல்வரத்தினம் அவர்கள் தலைமையில் சங்கக் காரியாலய மண்டபத்தில் நடைபெறுமென்பதனைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உப விதி 43இன் பிரகாரம் மேற்படி வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏதாவது பிரேரணையைப் பிரேரிக்க விரும்பும் பொதுச்சபை உறுப்பினர்கள் அப் பிரேரணையின் பிரதியொன்றை 09-04-96க்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் பிரேரணைகள் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறமாட்டா என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் 1993/94 நிதி ஆண்டின் எண்பார்வை அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது. அவ்வெண்பார்வை அறிக்கையின் பிரதியை பொதுச் சபைப் பிரதிநிதிகள் சங்க வேலை நாள்களில் சங்க காரியாலயத்தில் 10- 04-96இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம். தற்போதய சூழ்நிலை காரணமாக பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கு தனிப்பட்ட முறையில் அறிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி:

சங்கக் காரியாலய
தற்காலிக முகவரி:
புத்தூர் சந்தி,
மீசாலை.

ச. செல்வரத்தினம்,
தலைவர்.

ஆ. நாகராசா,
செயலாளர்.

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு. (சி-4137)

---

## மக்கள் நலன்காக்கும் பிரிவு

(இருபாலைச் சந்தி, கோப்பாய்)

## வன்னிப் பெருநிலப்பரப்பின் சேவை

கிளிநொச்சி மாவட்டம்:-
கிளை அலுவலகம் — இல: 861, ஈ.வை.எஸ், சிவிக் சென்ரர், வட்டக்கச்சி.

ஆரம்பகால உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள் அமைப்பின் தொடர்புகளுக்காக தங்களது தற்போதைய முகவரியை (வன்னி) மேற்கண்ட விலாசத்திற்கு அறியத் தரவும்.

மக்கள் நலன் காக்கும் பிரிவு
தலைமையகம்,
இயற்றாளை, வரணி.

25 - 03 - 1996. (40484)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை
மாணவர் கொடுப்பனவு பற்றிய

## அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் மாணவர்கள் தங்களுக்குரிய உதவிப்பணக் கொடுப்பனவை பின்வரும் ஒழுங்குகளுக்கமைய சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக உப அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| பீடம் | கொடுப்பனவுத் திகதி |
|---|---|
| கலைப்பீடம் — 9 ஆம், 10 ஆம் தவணைப் பணங்கள் (90/91/92/93 ஆம் ஆண்டு மாணவர்கள்) | |
| கலை | — 25-3-96 — 27-3-96 வரை |
| இராமநாதன் நுண்கலைப் பிரிவு | — 28-3-96 — 29-3-96 ,, |
| வர்த்தக முகாமைத்துவ பிரிவு, வியாபார நிர்வாகப் பிரிவு | — 1 4 96 — 2-4-96 ,, |
| மருத்துவ பீடம் (89/90/91/92/93 ஆம் ஆண்டு மாணவர்கள்) 10 ஆம் தவணைப் பணம்; விஞ்ஞான பீடம் (90/91/92 ஆம் ஆண்டு மாணவர்கள்) 10ஆம் தவணைப் பணம் | — 4-4-96 — 8-4-96 ,, |

மாணவர்கள் தமது பல்கலைக்கழக அடையாள அட்டையையும், உதவிப்பண பதிவுப் புத்தகத்தையும், ரூபா 5/- பெறுமதியான முத்திரையையும் கொண்டு வரல் வேண்டும்.

பதிவாளர் (சி/4136)

---

## உடன் சந்திக்கவும்

6/5, கன்னாதிட்டியைச் சேர்ந்த சோமசுந்தரம் நாதன் என்பவரை வினாசித்தம்பி குலசேகரம் தேடுகிறார்.

தொடர்பு:
கா. பஞ்சலிங்கம் (ஆசிரியர்)
ஐயா கடை சந்தி,
மீசாலை. (41095)

---

நாச்சிமார் கோவிலடி, தலையாளியில்
இயங்கி வந்த

## மணிக் கல்வி நிறுவனம்

சாவகச்சேரி இலங்கை வங்கிக்கு முன்னால் ஸ்ரீவள்ளி தேநீர்க் கடைக்கு அருகாமையில் 01-04-96 தொடக்கம் இயங்கவுள்ளது.

வழமையான ஆசிரியர்கள் கற்பிப்பார்கள்

| | |
|---|---|
| கணிதம்:- | க. வேலாயுதம் |
| விஞ்ஞானம்:- | இரா. செல்வவடிவேல் |
| சமூகக்கல்வி:- | K. S. முத்துலிங்கம், T. கிருஸ்ணகுமார் |
| தமிழ்:- | த.பொன்னுச்சாமி, செல்வி நாகராணி |
| வர்த்தகம்:- | P. வில்வராஜா |
| ஆங்கிலம் / ஆங்கில இலக்கியம் | - Mrs. சண்முகநாதன் |

ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரை, ஆண்டு 5 புலமைப் பரீட்சை வகுப்பு (1996)

அனுமதியை 27 - 03 - 1996 முதல் பெற்றுக் கொள்ளவும். (41093)

---


## பொதுக்கூட்டம்

பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் **31- 03- 96** ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு ஊத்து மடம் கரவெட்டியில் நடைபெறும். சகல பழைய மாணவர்களையும் தவறாது சமூகம் தரும்படி அழைக்கப்படுகிறீர்கள்.

ச. தர்மகுலசிங்கம்,
தலைவர்,
பழைய மாணவர் சங்கம்,
புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்,
யாழ்ப்பாணம். (40380)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## செல்வரட்னம் செந்தூர்குமரன்

(சின்னத்தம்பி)

முதலாம் ஆண்டில் ஆற்றாது அழுகின்றோம்
ஓர் ஆண்டாய் நாடெல்லாம் அலைகின்றோம்,
சின்னத்தம்பி! நீ நிம்மதியாய் சென்று விட்டாய்
எமக்கெல்லாம் எப்போது நிம்மதி கிட்டும்?

பிரிவால் துயருறும்

பெற்றோர், சகோதரர்கள்,
சிறிய தாயார்.

தற்காலிக முகவரி:-
மட்டுவில் தெற்கு,
மட்டுவில்.

(ஐயனார் கோவிலடி,
சுன்னாகம்.) (41221)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் யாழ். செல்லமுடியாததுக்கு அரசாங்கப் படையினரே காரணம்

## கூட்டணித் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 25

தற்போதும் யாழ்ப்பாணத்துக்குசென்று நாம் வாழ முடியாததற்கு காரணம் அரச படையினரே ஒழிய வேறு யாருமல்ல. ஆகவே பயங்கரவாதத்தை காரணம் காட்டி தமிழ் மக்களின் கோரிக்கைகளை மழுங்கடிக்கக்கூடாது.

இப்படிக் கூறினார் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம்.

இலங்கை மக்களிடையே ஒற்றுமை உணர்வை வளர்க்கும் லயன்ஸ் கழகத்தின் புதிய திட்டம் ஒன்று சம்பந்தமாக நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒற்றை ஆட்சி அமைப்பின் கீழ் ஒன்றுபட்ட இலங்கையை உருவாக்குவது என்பது நடவாத காரியம் ஆகும் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் தமிழர்களைக் கொண்டுவர நினைப்பது தவறாகும்.

இலங்கை தேசியக் கொடியில் உள்ள 4 இலைகளும், அந்தக் கொடி அறிமுகப்படுத்தப்பட்ட போது, அதில் இடம் பெற்றிருக்கவில்லை. இடை நடுவிலேயே அவை சேர்க்கப்பட்டன.

இப்படியான இடைச்செருகல்களுக்கு தமிழர்கள் மரியாதை செலுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறாகும்.

அதில் தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் வேறு ஏதாவது சின்னங்களும் சேர்க்கப்பட்டிருந்தால் அவர்களிடம் அதற்கான மரியாதையை எதிர்பார்க்க முடியும்.

அதே போல தேசிய கீதமும் அவரவர் தாய் மொழியில் பாடப்படும் போது அந்தஸ்தை எதிர்பார்க்க முடியும். அதற்கு பல நாடுகள் முன்னுதாரணமாக உள்ளன.

இலங்கையில் பயங்கரவாதத்தை ஆரம்பித்து வைத்தவர்கள் அரச படையினரே. தமிழ் இளைஞர்கள் தமது உரிமைகளை இழந்து வெறுப்பின் இறுதிக் கட்டத்திலேயே ஆயுதமேந்த முனைந்தனர்.

இப்படி அவர் கூறினார். (இ-3)

# உதயன்

## இயற்கையின் தண்டனை

போரும் வரட்சியும் என்றுமில்லாத நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளன. எனவே நாம் உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு சர்வதேச உதவிகளைத் திரட்டித் தாருங்கள்.—

ஐக்கிய நாடுகளின், உலக உணவுத் திட்டத்திடம் (WFP) ஸ்ரீலங்கா அரசு இவ்வாறு ஓர் அவசர வேண்டுகோளை விடுத்திருக்கிறது.

நாட்டின் வரண்ட பிரதேசங்கள் எனக் கருதப்படும் மாவட்டங்கள் பலவற்றிலும் கடந்த ,வருடம் பருவகாலத்தில் வழமையான மழைவீழ்ச்சி இல்லை. இவ் வருடமும் மிகக் கொடிய வரட்சி உண்டாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதனால் இன்னும் இரண்டொரு மாதங்களில் ஸ்ரீலங்காவில் பெரிய உணவு நெருக்கடி ஒன்று தோன்றும் ஆபத்து உண்டு.

மக்களைப் பசி, பட்டினி, சாவு ஆகியவற்றிலிருந்து காப்பதற்கு வெளிநாடுகளின் ஆதரவைக் கோருவது தவிர்க்க முடியாதது.

ஆனால் இங்கு இயற்கையின் கொடுமையால் வரப்போகும் நெருக்கடி ஏற்கனவே போரின் கொடுமையால் விளைந்துள்ள பொருளாதார, வாழ்வியல் நெருக்கடிகளுடன் சேர்ந்து மக்களை மிதித்து நசுக்கப்போகிறது.

வரட்சி இயற்கை தந்தது; அது பொய்த்ததால் வந்தது. ஆனால் போர் ஸ்ரீலங்கா அரசு தந்தது; தமிழர் உரிமைகளை வழங்குவதில் அது பொய்த்ததால், போலி வேடம்போட்டதால்வந்தது.

இயற்கையின் கொடுமையைத் தடுக்கும் சக்தி மனிதனுக்கு மிகக் குறைவு. ஆனால் மனிதன் தனது கொடுமையைத் தானே தவிர்த்துக் கொள்ளலாம்.

கடந்த பதின்மூன்று வருடங்களாக ஸ்ரீலங்கா அரசுகள் தமிழ் மக்கள் மீது போரைத் தொடுத்து தொடர்ந்து பாவம் புரிகின்றன.

அந்தப் பாவத்தை நிறுத்துவதற்கு, போர்க் கொடுமைகளை நீக்குவதற்கு சந்திரிகா அரசாவது நினைத்திருந்தால், போரினால் உருவாகியுள்ள நெருக்கடியைத் தவிர்த்திருக்கலாம்.

ஆனால் ஸ்ரீலங்கா அரசுகள், தமிழர்கள் மீதான கொடுங்கோன்மையை தீவிரப்படுத்தி வருகின்றனவே அன்றி, அவற்றைக் களைய எண்ணவில்லை. சந்திரிகா அரசு இதுவிடயத்தில் முந்திய அரசுகளை விடப் படு பயங்கரமாகச் செயற்படுகிறது.

அரசின் செங்கோல் வளையும்போதெல்லாம் அதனைத் தண்டிக்க இயற்கை பொய்ப்பது உண்டு. ஸ்ரீலங்காவில் உண்டாகிய வரட்சி, வரப்போகும் வரட்சி சந்திரிகா அரசின் கொடுங்கோன்மைக்குக் கிடைத்த தண்டனையே.

இதனை உணரும் தர்ம சிந்தனை சந்திரிகாவுக்கு இன்னமும் இல்லை. வடபகுதி மீதான மற்றொரு பெரிய இராணுவத் தாக்குதலுக்கு படைகள் தயாராவதாக வந்துள்ள செய்திகள் அவருக்கு அரசியல் பக்குவம் இல்லை என்பதற்கான சாட்சிகள்.

இராணுவ அடக்குமுறை மூலம் தமிழரின் வாழ்வை வேட்டிக்சரித்து தீவினையை மேலும் சேர்த்துக் கொள்கிறார். அதனை அனுபவித்து உழலும் வரை அவர் திருந்துவார் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. அதனால் இயற்கை ஸ்ரீலங்காவை மேலும் தண்டிக்கும் அது நிச்சயம்!

## சுதந்திரப் பறவைகள்

சாவகச்சேரி, மார்ச் 25

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகார பூர்வ ஏடான ''சுதந்திரப் பறவைகள்'' பங்குனி மாத இதழ் வெளிவந்துள்ளது.

''தென் தமிழீழத்தில் இராணுவ வெறியாட்டம்; பெண்கள் மீது பாலியல் வன்முறைகள்'' என்ற முன்பக்க தலைப்புக் கட்டுரை —

உலகப் பெண்ணினத்திடம் ஒரு வேண்டுகோள் என்ற ஆசிரியத் தலையங்கம்—

1996 ஆம் ஆண்டில் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டுத் தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் விடுத்த செய்தி—

என்பவற்றுடன் மற்றும் பல கட்டுரைகள், சிறுகதை, கவிதைகள் இந்த இதழில் பிரசுரமாகியுள்ளன. (அ)

## குருபூசை

சாவகச்சேரி, மார்ச் 25

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமியின் குரு பூசையும், 15 ஆவது ஆண்டு ஆராதனை விழாவும் எதிர்வரும் புதன் கிழமை காலை 8 மணிக்கு மீசாலை பன்றிக்கேணி முருகன் ஆலய வீதியில் அமைந்துள்ள நல்லை ஆதீனத்தில் நடைபெறவிருக்கின்றன.

அன்று காலை 8 மணிக்கு திருவுருவப்பட ஊர்வலம் நல்லை ஆதீனத்தில் இருந்து ஆரம்பமாகி சித்திர வேலாயுதர் கோவில், கண்டி வீதி, அல்லாரை வீதி, மாவடிப் பிள்ளையார் கோவில் ஆகியவை வழியாக பன்றிக்கேணி முருகன் ஆலயத்தை வந்தடையும். (உ-3)

## பிரிட்டிஷ் தூதருடன் இன்று 5 தமிழ்க் கட்சிகள் பேச்சு

கொழும்பு, மார்ச் 25

அரசியல் பரவலாக்கல் குறித்து ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு இன்று கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதுவருடன் பேச்சு நடத்தவிருக்கிறது.

ஈ. பி. டி. பி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ஈரோஸ் ஆகிய கட்சிகள் அங்கம் வகிக்கும் கூட்டமைப்பே இன்று பிரிட்டிஷ் தூதரைச் சந்திக்கின்றது.

கடந்தவியாழனன்று இக்கூட்டமைப்புப் பிரதிநிதிகள் அமெரிக்க தூதரைச் சந்தித்தனர் என்பது தெரிந்ததே.

### கூட்டணி நாளை பேச்சு

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் காரணமாக வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள் மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி தூதுக்குழு ஒன்று நாளை பேச்சு நடத்த விருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### தமிழீழ வானொலி

திங்கள் மாலை

- ★ 5-00 — ஆரம்பம் — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சி கீதம்
- ★ 5-10 — அலையோசை
- ★ 5-30 — போர் முரசு
- ★ 6-00 புதியவை
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15— ஓர் இசை நாடாப் பாடல்
- ★ 6-30—ஒலிபரப்பு நிறைவு

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

திங்கள் இரவு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8-02 — தளிர்கள்
- ★ 8-20 — கணப்பொழுது
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — அறிவிப்புக்கள் தொடர்ந்து 9-00 மணி வரை தாயகப் பாடல்கள்

செவ்வாய் காலை

- ★ 7-00 — ஆரம்பம்
- ★ 7-02— மாவீரர் வணக்கம் தொடர்ந்து 7-30 மணி வரை இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35—பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — அறிவிப்புகளைத் தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப் பாடல்கள்

# சில பாடசாலைகளை முழுமையாக இயங்க வைக்க முடியாத நிலை

## தங்கி இருப்போரின் ஒத்துழைப்பு கோரப்படுகிறது

சாவகச்சேரி, மார்ச் 25

வடமராட்சி, தென்மராட்சி மற்றும் இடம்பெயர்ந்த வலிகாமம் பகுதி பாடசாலைகளை முழுமையாக இயங்க வைப்பதற்கு வசதியாக தற்சமயம் பாடசாலைகளில் தங்கி இருப்பவர்களை விரைவாக வெளியேறி பாடசாலைகள் கிரமமின்றி இயங்க ஒத்துழைக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான பாடசாலைகளிலிருந்து மக்கள் வெளியேறியுள்ள போதிலும் இன்னும் சில பாடசாலைகளில் மக்கள் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் எவ்வளவு விரைவாக வெளியேறுகிறார்களோ அவ்வளவு விரைவாக பாடசாலைகளை முற்றாக இயங்க வைக்க முடியுமென கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-7)

### கூட்டம்

சாவகச்சேரி, மார்ச் 25

வடமாகாண புற்றுநோய்—எயிட்ஸ் நோய்த்தடுப்புச் சங்கத்தின் விசேட செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் புதன் கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவிருக்கிறது. (உ-3)

## சடலமான பின்னரும் அலையும் சிப்பாய்கள்

Wandering Soldiers

கொழும்பு, மார்ச் 25

கடந்த வாரம் மல்லாகத்தில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் உயிரிழந்த 18 சிப்பாய்களில் ஒருவரின் சடலம் அலைக்கழிக்கப்படுவது பற்றிய செய்தி ஒன்றை கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

இச்சம்பவத்தில் இறந்த கருணசேன என்ற சிப்பாயின் சடலம் எனத் தெரிவித்து ஒரு சடலத்தை கடந்த 19ஆம் திகதி அச்சிப்பாயின் ஊரான கடுகண்ணாவைக்கு இராணுவ அதிகாரிகள் அனுப்பி வைத்தனர்.

வீட்டில் பிரேதப் பெட்டியைத் திறந்த உறவினர்கள் அது கருணசேனவின் சடலமல்ல எனச் சந்தேகம் கொண்டதை அடுத்து அதைக் கண்டிக்கு எடுத்துச் சென்று இராணுவ அதிகாரிகளிடம் திருப்பி ஒப்படைத்தனர். ஆனால் படை அதிகாரிகளோ அது கருணசேனவினுடையதே என்றும் கண்ணிவெடித் தாக்குதலில் சடலம் சிதைந்துள்ளதால் அவ்வாறு வித்தியாசமாகத் தெரிகின்றது என்றும் தெரிவித்து சடலத்தை மீண்டும் கருணசேனவின் வீட்டுக்கே திருப்பி அனுப்பி வைத்தனர்.

இறந்தவர் யாராயிருந்தாலும் சரி — சச்சரவு செய்யாமல் — அச்சடலத்துக்குரிய இறுதிக் கிரியைகளை நடத்துவோம் என்ற முடிவுக்கு வந்த உறவினர்கள் அதற்கான சடங்குகளைச் செய்துகொண்டிருந்த போது— திடீரென வந்த இராணுவ அதிகாரிகள், அது கருணசேனவின் சடலம் அல்ல என்று கூறி அதனை மீண்டும் எடுத்துச் சென்றனர்.

கண்ணிவெடிச் சம்பவத்தில் காயமுற்ற கருணசேன கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. சடலத்தை மீண்டும் எடுத்துச் செல்ல வந்த அதிகாரிகள் புறப்பட முன்னரே கருணசேனவின் பெற்றோரும் உறவினர்களும் கொழும்பு நோக்கிப் புறப்பட்டு விட்டனராம். (உ-10)

# கடமைக்குத் திரும்பாத பல்கலைக்கழக ஊழியர்

## சம்பளம் நிறுத்தப்படும்

சாவகச்சேரி, மார்ச் 25

யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கல்வி சார்ந்த, சாராத ஊழியர்களில் தகுந்த காரணம்காட்டி லீவு பெறாது இது வரை வேலைக்கு சமுகமளிகாதிருப்போருக்கு இம் மாதம் முதல் சம்பளம் நிறுத்தப்பட விருப்பதாக பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து கொழும்பு மற்றும் பகுதிகளில் யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கப்பட்டுவந்தது.

தகுந்த காரணம் காட்டி லீவு பெற்றவர்கள் தவிர்ந்த ஏனையோரை கிளிநொச்சி, கைதடி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் இயங்கும் பல்கலைக்கழக அலுவலகங்களுக்கு சமுகமளிக்குமாறும்

அவ்வாறு சமுகமளிக்காதவர்களுக்கு இம் மாதத்துடன் சம்பளம் நிறுத்தப்படும் என்றும் — அவர் தெரிவித்தார். (இ-3)

## வர்த்தமானி பார்வைக்கு

சாவகச்சேரி, மார்ச். 25

கிராம சேவையாளர் தரம் 2 இற்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை பற்றிய விவரம் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடி, பருத்தித்துறை பஸ் நிலையச் சதுக்கம், கிளிநொச்சி வை. எம். சீ. ஏ. கட்டடம் ஆகியவற்றில் அமைந்துள்ள உதயன் கிளைப் பணிமனைகளில் அலுவலக நேரங்களில் பார்வையிட முடியும். இந்தப் பதவிக்கான விண்ணப்பப் படி[illegible] பணிமனைகளில் பெற்றுக் கொள்ள முடியும். (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லையா சின்னத்தங்கம்

குப்பிழானைச் சேர்ந்த செல்லையா சின்னத்தங்கம் 24-3 96 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லையா அப்புத்துரையின் அன்புத் தாயாரும், இராசமணியின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற ஆசிரியர் சங்கரப்பிள்ளையின் சகோதரியும், காலஞ்சென்ற (தலைமையாசிரியர்) கதிரவேலின் சிறிய தாயரும், தவேஸ்வரி (பம்பலப்பிட்டி இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை), பாஸ்கரன் (கொழும்பு), நகுலேஸ்வரன் (கனடா), கமலேஸ்வரி (கனடா), விக்கினேஸ்வரி (டென்மார்க்), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), சிறீதரன் (சுவிஸ்), கேதீஸ்வரி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-3-96) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
செ. அப்புத்துரை
(மகன்)

தற்போதைய முகவரி:
C/o ச. கனகசபை
சரசாலை வடக்கு,
பாலத்திடல், சாவகச்சேரி.

(41220)

## திருமதி சுகிர்தம்மா சீவரத்தினம்
(திரவியம்)

தெல்லிப்பளை வறுத்தலை விளானை பிறப்பிடமாகவும், 104,2/1, மானிங்ஸ் பிளேஸ், C. D. I. தொடர் மாடி, கொழும்பு - 6 விலாசத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுகிர்தம்மா (திரவியம்) சீவரத்தினம் 22 - 03 - 1996 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற R.T. சீவரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை) அவர்களின் அன்பு மனைவியும், துரைராயசிங்கம் (ஓய்வு பெற்ற பொறியியல் ஆலோசகர், கொழும்பு), காலஞ்சென்ற ஆசிரியர் செல்வராயசிங்கம், விஜயராயசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர், மல்லாகம்), அரியராயசிங்கம் (கட்டடப் பொருள் மதிப்பீட்டாளர், கொழும்பு), சுகிர்தராயசிங்கம் (பொறியியல் அத்தியட்சகர், எயர்லங்கா, கொழும்பு), தேவராயசிங்கம் (கொழும்பு), கருணேந்திரன் (பெறியியலாளர். கனடா), தேவமலர், சத்தியதேவி, திவ்வியராணி (திட்டமிடல் அதிகாரி, தேசிய கல்வி நிறுவனம், மகரகம), தேவரஞ்சிதம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சொர்ணகாந்திமலர் (ஓய்வு பெற்ற வைத்திய கலாநிதி இங்கிலாந்து), ஜீவமணி, சாந்தகுமாரி, லக்ஷ்மி (ஆஸ்திரேலியா தூதரகம்,கொழும்பு),சாந்தினி,றஜனி (கனடா), அண்மையில் காலஞ்சென்ற ஓய்வு பெற்ற பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் பரமேஸ்வரநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கலாநிதி இராகுலன் (இங்கிலாந்து), கலாநிதி மேகலா (இங்கிலாந்து), பாமதி (ஆசிரியை வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), ராதா, இரவீந்திரன் (இயந்திர தொழில் நுட்பவியலாளர், மஸ்கன்ஸ் நிறுவனம், கொழும்பு), அபிராமி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இறுதி ஆராதனைகள் 23 - 03 - 96 இல் அன்னாருடைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சீ. விஜயராயசிங்கம்
(மகன்)

தற்போதைய முகவரி:
மே/ பா. S. அருள்பிரகாசம்,
உஷன், மிருசுவில்.

(41219)

## கார்த்திகேசு சுப்பிரமணியம்

சங்கரத்தை, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும்,மானிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது முள்ளியவளையில் வசித்தவருமாகிய கார்த்திகேசு சுப்பிரமணியம் 20 - 03 - 96 இல் கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - பாறுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், ஆறுமுகம்-சிவபாக்கியம் தம்பதியினரின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (National Bank — Kuwait), பராசக்தி (மாணவி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வள்ளிநாயகியின் சகோதரரும், குமாரசாமி, பாலேஸ்வரி, ராஜேஸ்வரி (கொழும்பு), விக்னேஸ்வரி (கனடா), கிருஷ்ணாணந்தன் (Excuitive Manager— Kuwait), திருவருட்செல்வம் (கனடா), ரஞ்சித் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், பத்மலோசனா, தர்மலோசனா, சற்குணலோசனா, றோகினி ஆகியோரின் மாமனாரும், துஷ்யந்தன் (Kuwait), அரவிந்தன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), தர்சன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), மஞ்சுளா (கொழும்பு), சோபனா (கனடா), ஷாளினி (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21 - 3 - 96 இல் கிளிநொச்சியில் இடம்பெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
கி. அரவிந்தன்
(பெறாமகன்)

(40485)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 25-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## கலை முதற்தேர்வு இறுதிப் பரீட்சை

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலை முதற் தேர்வு இறுதி ஆண்டுப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நடைபெறும்.

பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமக்குரிய அனுமதி அட்டையை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். அரச அதிபருக்குக் கிடைத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## யுனிசெவ் பவுஸர் வழங்கும்

சாவகச்சேரி, மார்ச் 25

யாழ்ப்பாணத்தில் இடம் பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி பகுதியில் உள்ள மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையை நீக்கும் வகையில் யுனிசெவ் அமைப்பு பவுஸர் ஒன்றை வழங்கவிருக்கிறது.

கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் அந்த அமைப்புடன் நடத்திய பேச்சுக்களின் போது இது தொடர்பாக உறுதிமொழி வழங்கப்பட்டது.

இந்த பவுஸரை எடுத்து வர பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாகவும் —

விரைவில் அது கப்பல் மூலம் எடுத்து வரப்படும் என்றும் — யாழ். அரச அதிபர் தெரிவித்தார். [இ-3-ரி[

## விவசாய பீடம்

சாவகச்சேரி, மார்ச் 25

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்துக்கு 95/96 கல்வியாண்டுக்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கான விரிவுரைகள் கிளிநொச்சியில் ஆரம்பமாகியுள்ளன.

### கிழக்கில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்துக்கு நேற்று முன்தினம் காலை 9. 40 மணியளவில் வந்த பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்த தாக்குதலில் இரு பொலீஸார் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இத்தாக்குதலில் ஏ.கே. ரக துப்பாக்கி — 2, ஏ. கே. மகஸின் — 2, நடுத்தரரவைகள் — 60 ஆகியவை விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன, (உ-3-7)

### எந்த நேரமும் ..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றன'' என்று மற்றொரு கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த யுத்தத்துக்கு தேவையான — எதிர்பார்க்கப்பட்ட — ஆயுதங்கள் வெளிநாடுகளில் இருந்து வந்து சேர்ந்து விட்டன என்றும் அது தெரிவித்துள்ளது.

(இ-3-6)

## UNIVERSITY OF JAFFNA

TO ALL MEMBERS OF THE FACULTY BOARD, FACULTY OF ARTS

The Meeting of the Faculty Board of the Faculty of Arts will be held at 10-00 a.m. on Wednesday 27 th March 1996 at Department of Siddha Medicine, Kaithady. Please be Present.

Dean,
Faculty of Arts.

## கிழக்கில் 12 தினங்களில் 72 படையினர் பலியாகினர்

கிழக்கில் விடுதலைப் புலிகள் கடந்த 12 தினங்கள் மேற்கொண்ட தாக்குதலில் 72 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி வெல்லாவெளியில் நடந்த தாக்குதலில் 24 அதிரடிப் பொலீஸாரும் —

அழிஞ்சிப் பொத்தானை பொலீஸ் நிலையத் தாக்குதலில் 5 பொலீஸாரும் —

வவுணதீவில் 3 படையினரும் —

வந்தாறுமூலை தாக்குதலில் 40 படையினருமாக மொத்தம் 72 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். (இ-3)

## கிளிநொச்சி மாவட்டத்தில் டாக்டர்கள் பற்றாக்குறை
## 20 பேரின் இடத்தில் நால்வரே பணி

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் டாக்டர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக மாவட்ட வைத்திய அதிகாரியும், பிரதிமாகாண சுகாதாரப்பணிப்பாளருமான டாக்டர் கே. எஸ். சிவகுரு தெரிவித்தார்.

20 டாக்டர்கள் பணிபுரிய வேண்டிய இந்த ஆஸ்பத்திரியில் 4 பேர் மட்டுமே பணி புரிவதாக அவர் தெரிவித்தார்.

இரு டாக்டர்கள் மட்டுமே நிரந்தரமாகப் பணி புரிவதாகவும்—

தற்போது இடம் பெயர்ந்து வந்து இரு டாக்டர்கள் பணி புரிவதாகவும் — அவர் கூறினார். (இ-3)

### வந்தாறுமூலையில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ ஆர். பி. ஜி. | — 1 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி | — 6 |
| ★ ஏ. கே. துப்பாக்கி | — 32 |
| ★ தொலைத் தொடர்பு சாதனம் | — 1 |
| ★ ஏ.கே.எல்.எம். ஜி நடுத்தர தொடர் ரவை | — 1304 |
| ★ ரவைக் கூடுகள் | — 123 |
| ★ ஏ.கே. எல்.எம்.ஜி ரம் ரவைக்கூடு | — 9 |
| ★ ஆர். பி. ஜி ஷெல் | — 2 |
| ★ ஆர். பி. ஜி புறொப்பிளர் | — 2 |
| ★ 60 மி. மீ. ஷெல்கள் | — 13 |
| ★ 60 மி. மீ. பூஸ்ரர் | — 77 |
| ★ கைக்குண்டு | — 22 |
| ★ மின்கலம் | — 1 |
| ★ நடுத்தர ரவை | — 10134 |

(இ-3)

## சாந்திகம்
### விசேட பொதுக்கூட்டம்

சாந்திகம் உளவளத்துணை சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 31-03-96 இல் சாவகச்சேரி சுகாதார வைத்திய (M.O.H.) பணிமனையில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. சகல அங்கத்தவர்களும் இதில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றீர்கள்.

Dr. இ. சிவசங்கர்
இடைக்கால தலைவர்

(41196)

# மரண அறிவித்தல்கள்

## கார்த்தியேசு சுப்பிரமணியம்
(பெயின்ரர்)

மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கா. சுப்பிரமணியம் நேற்று (24-03-96) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்பு கணவரும், புவனேஸ்வரி, பாலசிங்கம், துரைசிங்கம் (பெயின்ரர்), வீரசிங்கம் (பெயின்ரர்), இராஜேஸ்வரி, பாலச்சந்திரன் (தெல்லிப்பளை துர்காதேவி தேவஸ்தான தொண்டர்), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26-03-96) காலை 10 மணியளவில் அன்னாரின்இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக மட்டுவில் ஊறிமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலா (மருமகன்)

அரசடி ஒழுங்கை,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(41222)

## திருமதி பரமேஸ்வரி நடராசா

உடையார் ஒழுங்கை அராலி தெற்கை நிரந்தர வசிப்பிடமாகவும், தற்போது கச்சாய் வீதி சாவகச்சேரியில் வசித்தவருமாகிய பரமேஸ்வரி நடராசா காலமானார்.

அன்னார் இராமலிங்கம் நடராசா (முன்னாள் இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)வின் அன்பு மனைவியும், தில்லைக்கண்ணனின் அன்புத் தாயாரும், ஜெயகாந்தனின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் கைதடியில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. இ. நடராசா (கணவர்)

தற்போதைய முகவரி:
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(41094)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org